**வ/ப களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனி -2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனியின் ("கம்பனி") 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் உயிரியல் சொத்துக்களை சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,333,382 ஆன தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் தவறுதலாக அதன் வருடாந்த பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதியான ரூபா 1,228,538 | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது உயிரியல் சொத்துக்களை சுவீகரிக்கும் செலவினத்தின் தேறிய பெறுமதியான ரூபா 1,228,538 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. 2018/2019 மற்றும் 2019/2020 நிதியாண்டுகளில் காசுப் | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் சொத்துக்களின் சுவீகரிப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது தேறிய பெறுமதி சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் பெறுமதி ஒப்பீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் இந்த ஆண்டிலும் தேறிய பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வரிக் கொடுப்பனவு அல்லது மீள அறவிடல் இடம்பெற்றிராத போதிலும் ரூபா 4,162,195 தொகையான வருமான வரி பெறுவனவொன்று காசுப் பாய்ச்சலில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்திக்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் 2018 ஆம் ஆண்டளவில் முழுமையாக தேய்விடப்பட்டுள்ள ரூபா 240,350,688 கிரயமான பொறிகள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அதன் மதிப்பிடப்பட்ட வலு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீள் திருத்தி சரியான கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017.12.13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2016/2017 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள வாறு நிறுவனத்திற்குச் சொந்தமான அசையாத மற்றும் அசையும் சொத்துக்கள் மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எமது கோரிக்கைக்கு அமைய குறித்த சொத்துக்களில் கணக்கிடப்பட்டு நான்கு தொழிற்சாலைகளுக்கான சொத்துக்கள் தொடர்பில் 032 மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்குரிய மதிப்பீடு உத்தியோகத்தர்கள் உரிய பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளதுடன் மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மேலதிக பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் மீள மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1994 ஆம் ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்ட ரூபா 2,550,000 கூட்டுத்தொகையான களுபோவிட்டியான மற்றும் தேறுங்கல தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகள், இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்திக்கமைய இதுவரையிலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுபோவிற்றியான மற்றும் டாறுங்கல தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையொன்றினை இதுவரை பெற்றிராததுடன் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு மதிப்பீட்டு அறிக்கைகளை துரிதமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் காணிகளை மீள் மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய வங்கி கடன் வட்டி செலவினம் ரூபா 1,674,073 ஆன போதிலும் அது ரூபா 1,298,624 ஆக ரூபா 375,450 இனால் குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கைவிடப்படாதுசரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நானாவித கடன் கொடுத்தோர் பெறுமதியானது நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 8,875,372 மற்றும் பட்டோலையின் பிரகாரமான பெறுமதி ரூபா 8,682,151 ஆனமையால் ரூபா 193,221 ஆன இணங்காத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திருத்துப்பட்டுள்ளது. பட்டோலை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பேரேட்டு மீதி பட்டோலைகளின் மீதிகளுக்கு சமனானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (இ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் சேம நிதியத்திற்கான பங்களிப்பினை கணக்கிடும் போது அடிப்படைச் சம்பளத்திற்கு வாழ்க்கை படிகளை சேர்க்கப்பட்டு அந்த உழைப்பின் அடிப்படையில் பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2017/2018 ஆம் ஆண்டு வரையிலும் கம்பனியினால் வாழ்க்கை செலவின படியினை கருத்தில் கொள்ளாது சேம நிதியத்தின் பங்களிப்பினை கணிப்பிட்ட காரணத்தால் 2012/2013 ஆம் ஆண்டு முதல் 2017/2018 ஆம் ஆண்டு வரையிலும் சேம நிதியத்திற்கு செலவு வைக்க | 2012/2013 ஆம் ஆண்டு முதல் வாழ்க்கைச் செலவின படியினை கருத்தில் கொள்ளாது சேமநிதியத்தின் பங்களிப்பினை கணிப்பிடுவதற்காக சேம நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய பணத்தின் அளவினை கம்பனியின் நிதி நிலைமை சீராக்கப்பட்டதுடன் உடனடியாக செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய அதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் சேம நிதியத்தற்கான பங்களிப்பு கணிப்பிடப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

வேண்டிய நிலுவை பங்களிப்பு ரூபா 1,695,177 ஆக காணப்பட்டதுடன் அதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய மிகை அறவீடு ரூபா 847,589 என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் கம்பனி இந்த செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பண செலுத்தல்கள் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் ஏனைய முற்பணங்களாக ரூபா 1,408,881 வெளிப்படுத்தப் படுவதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் பட்டோலைகளின் பிரகாரம் இந்த மீதிகள் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் உருவாகிய மீதிகளாகும். நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் இந்த மீதிகளை சர்ச்சைக்குரிய விடயங்களாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன. | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் மீதிகள் என்பதால் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களின் அல்லது உரிய நிறுவனங்களிட மிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | புஸ்ஸல்ல பெருந்தோட்ட கம்பனிக்குரிய இராகம தோட்ட கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் போதாதுள்ளதாக கடந்த வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டின் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 1,046,771 தொகை அந்த கம்பனியிலிருந்து பெற வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நீண்டகாலமாக முன் கொண்டுவரப்படும் மீதிகள் என்பதால் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் பெற வேண்டிய மீதிகளை ஒப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்க வேண்டும். |
| (இ) | 2003 ஆம் ஆண்டின் டீஉளஉள டுயமெய டுவன. கம்பனிக்கு ரூபா 10,000,000 ஆன கடன் தொகை 22 சதவீத வட்டியின் அடிப்படையில் 12 தவணைகளில் அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த | டீஉளஉள டுயமெய கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி தொடர்பில் மாதாந்தம் | கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டியை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அவற்றில் எந்தவொரு தவணையையும் அறவிட முடியாதிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகை ரூபா 58,382,429 ஆகும். | நினைவுறுத்தல் கடிதங்கள் வெளியிடப்படுவதுடன் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு இயலுமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் தேயிலை முகவர் நிறுவனமொன்றிடமிருந்து கம்பனிக்கு பெற வேண்டிய ரூபா 798,461 தொகையை முன்கொண்டு வந்தவாறு காணப்பட்டதுடன் அதனை அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் மீதி என்பதால் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்து எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் புத்தகங்களி லிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ரீ சக்தி நிதியத்திற்கு மற்றும் மேலும் இரு தனியார் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,710,375 கூட்டுத்தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களினால் இந்த பணத்திற்கு உரித்து கோரப்படாமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்படுகின்றது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காசோலைகள் இரத்துச் செய்யப்படுதல் மற்றும் உழைக்கும் போதே செலுத்தல் மிகை அறவீடுகள் முறையே ரூபா 843,158 மற்றும் ரூபா 59,344 அட்டுறு செலவுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வியாபார கடன் கொடுத்தோரின் கீழ் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டிய ரூபா 1,582,797 ஆன பெறுமதியுடைய மீதிகள் வேறுபடாது முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் மீதி என்பதால் எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 8.2.2 ஆம் பிரிவு | நிதியத்தினை நிதிய முதலீடுகளின் போது நிதி அமைச்சரின் அல்லது உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியினால் ரூபா 159,454,572 குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் உரிய அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 9.1.4 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவத்திற்காக சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழிக் கையேடொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்ப வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவத்திற்காக சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்காக உரிய செயல்வழிக் கையேடொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல்வழிக் கையேட்டினை துரிதமாக தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 15,144,959 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய பற்றாக்குறை ரூபா 43,267,577 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 58,412,536 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு உற்பத்திக் கிரயம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 54,989,023 இனால் அதிகரித்தமை மற்றும் நிதி வருமானம் ரூபா 3,215,607 இனால் வீழ்ச்சியடைந்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள், கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விடயம் | 2020 / 2021 | 2019 / 2020 | வேறுபாடு | விலகல் நலன் / நட்டம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| **வருமானம்** | | | | |
| விற்பனை வருமானம் | 1,175,716,247 | 937,789,275 | 237,926,972 | 25 |
| விற்பனைக் கிரயம் | 1,158,860,303 | 845,680,913 | 313,179,390 | 37 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 15,240,381 | 7,201,626 | 8,038,755 | 112 |
| நிதி வருமானம் | 11,508,748 | 14,724,355 | (3,215,607) | (22) |
| **செலவினம்** | | | | |
| **நிர்வாக செலவினம்** | 43,913,954 | 50,712,395 | (6,798,440) | (13) |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் | 646,594.64 | 400,677 | 245,917 | 61 |
| நிதி செலவினம் | 14,189,483 | 19,653,695 | (5,464,211) | (28) |

கடந்த வருடத்திற்கு ஒப்பாக விற்பனை வருமானம் 25 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனைக் கிரயம் 37 சதவீதத்தினால் அதிகரித்தமையால் மீளாய்வாண்டின் போது கம்பனி கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் நட்டமொன்றினை காண்பித்திருந்தது. அவ்வாறே, நிதி வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 22 சதவீத வீழ்ச்சியினை காண்பிக்கின்றது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் கடந்த வருடத்தின் நடைமுறை வீதம் 1:3 சதவீதமாக வேறுபாடொன்று இல்லாதிருந்த போதிலும், மொத்த நடைமுறை பொறுப்புகளுக்கு ஒப்பாக இருப்பின் பெறுமதி 34 சதவீதமாக காணப்பட்டமையால் விரைவுச் சொத்து விகிதம் 1:2 எனும் மட்டத்தில் காணப்படுகின்றது. அவ்வாறே, கம்பனியின் மொத்த இலாப வீதத்தினை கருத்திற்கொள்ளும் போது கடந்த வருடத்தில் நிலவிய 9.8 சதவீத அளவானது மீளாய்வாண்டின் போது 1.4 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தேறிய இலாப வீதம் கடந்த வருடத்தில் நிலவிய 5 சதவீத அளவு 1.3 சதவீதமான மறைப் பெறுமதியை கொண்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கம்பனியால் நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து அரச வங்கியொன்றிடமிருந்து ரூபா 8,490,000 ஆன வங்கி மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வுக் காலப்பகுதியின் இறுதியளவில் வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 62,973,870 ஆக காணப்பட்டதுடன், 2020/2021 ஆம் ஆண்டுக்காக வங்கி மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 9,358,767 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்படு மூலதன கடன்ாக ரூபா 18,500,000 ஆன தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக மீளாய்வாண்டினுள் வட்டியாக ரூபா 1,298,623 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதி நிலைமை | 2015ஆம் ஆண்டின் போது தேயிலைச் சக்தி நிறுவனத்திற்கு ரூபா 50 மில்லியன் வழங்கப்படுதல் மற்றும் மெணிக்திவெல தேயிலை தொழிற்சாலையின் 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக ரூபா 41 மில்லியனான தொகையும், இயந்திரங்கள் மற்றும் பொறிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 28 மில்லியனான தொகை செலவிடப்பட்டதுடன், வங்கி மேலதிகப்பற்று கிரமமாக அதிகரித்துள்ளது. மேலும், சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ளாது சுவீகரிக்கப்பட்ட மெணிக்திவெல மற்றும் ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலைகளின் நஷ்டமும் வங்கி மேலதிகப்பற்று அதிகரிப்புக்கு பங்களித்துள்ளது. அவ்வாறே உலகம் முழுவதும் கோவிட் தொற்றுநோய் பரவி வருவதால் பல்வேறு நாடுகள் மூடப்பட்டுள்ளதாலும், பயணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளாலும் சர்வதேச வர்த்தகத்தை பாதிக்கும் பாதகமான நிலைமைகள் காரணமாக பூர்த்தி தேயிலைக்கான கேள்வி குறைவடைந்துள்ளது. இதனால், தேயிலை ஏலத்தில் தேயிலை விலை | நல்ல நிதி நிலையை பராமரிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வீழ்ச்சியடைந்து வருகிறது. இது நிறுவனத்தின் காசுப்பாய்ச்சலினை நேரடியாக பாதிக்கும் காரணியாகும். மேலும், தேயிலை நிலங்களுக்கு வெளியிடப்படும் உரத்தின் அளவு கட்டுப்படுத்தப்பட்டதால், தேயிலை நிலங்களில் இலை விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளதுடன், உரத் தட்டுப்பாட்டால் அறுவடை செய்யப்பட்ட இலைகள் மஞ்சள் நிறமாக மாறியுள்ளது. இது தயாரிப்பில் அத்தியாவசியமற்ற தேயிலை மற்றும் கழிவுத் தேயிலை ஆகியவற்றின் சதவீதம் அதிகரிக்க வழிவகுத்தது, மேலும் அதன் NSA மிகக் குறைவாக உள்ளது. இது நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினை எதிர்மறையாக பாதித்த மற்றொரு காரணியாகும். இத்தகைய கடினமான நேரத்தில், 2019/2020 நிதியாண்டின் இறுதியில், ரூபா 87 மில்லியனாக காணப்பட்ட வங்கி மேலதிகப்பற்று 20/21 நிதியாண்டின் முடிவில் ரூபா 62.9 மில்லியனாக குறைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கம்பனி 2015 ஆம் ஆண்டின் போது தேயிலை சக்தி நிதியத்திற்கு வருடாந்தம் 11 சதீவமான வட்டி வீதத்தின் அடிப்படையில் ரூபா 50 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 59,532,264 செலவிடப்பட்டு தேயிலை சக்தி நிதியத்திற்குரிய மனிக்டிவல காணியின் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இலக்கம் அமப/19/0743/117/024 கொண்ட மற்றும் 2019 மார்ச் 19 ஆந் திகதிய அமைச்சரவையின் குறிப்பின் பிரகாரம் கடன் தொகை உரிய வட்டி மற்றும் | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மெணிக்டிவல தொழிற்சாலை எமது கம்பனிக்கு சுவீகரிக்கப்பட்ட போதிலும், காணியின் உரித்தினை நிறுவத்திற்கு சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் இதுவரையிலும் இடம்பெற்றவாறு உள்ளதுடன் இந்த வருடத்தில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலையின் உரித்தினை கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கம்பனி செலவிட்ட அபிவிருத்தி செலவினங்களுக்காக ஹினிதும மற்றும் மனிக்டிவல தொழிற்சாலைகளின் உரித்தினை சட்டபூர்வமாக கம்பனிக்கு சுவீகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் உரித்து சுவீகரிக்கப்பட்டிராததுடன் வருடாந்தம் ரூபா 5,500,000 படியான பெற வேண்டிய வட்டித்தொகையும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஹினிதும ஹீல்ஸ் மற்றும் மனிக்டிவல தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தி பணிகளுக்காக சாட்டுதல் செய்து இந்த இரு கைத்தொழிற்சாலைகள் பொதுத்திறைசேரிக்கு செலவின சுமையொன்றாக இல்லாதவாறு இலாபமீட்டும் முறையில் பேணிச் செல்வதற்குரிய அனைத்து பணிகளும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமப/19/0743/117/024 ஆம் இலக்க மற்றும் 2019 மார்ச் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு இந்த கைத்தொழிற்சாலைகள் வழங்கப்பட்ட பின்னர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர்ச்சியாக நட்டமீட்டும் நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான திரண்ட நட்டம் ரூபா 112,475,388 ஆகும். அவ்வாறே டாறுங்கல தேயிலை கைத்தொழிற்சாலையும் 2015 ஆம் ஆண்டு முதல் கருத்தில் கொள்ளும் போது தொடர்ச்சியாக நட்டமீட்டியவாறு காணப்பட்டது. | கைத்தொழில்சாலை அமைந்துள்ள பிரதேசத்தில் தேயிலை கொழுந்துகளை பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் மற்றும் தேயிலை ஏலத்தில் விலை பொதுவாக வீழ்ச்சியடைந்தமை போன்ற காரணங்களினால் தொழிற்சாலைக்கு நட்டமான நிலைமை ஏற்படுவதற்கு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. | பொதுத்திறை சேரிக்கு செலவின சுமையொன்றாக அல்லாது அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் இலாபமாக நடாத்திச் செல்வதற்குரிய அனைத்து பணிகளும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் 04 தேயிலை தொழிற்சாலைகளுக்காக மீளாய்வாண்டினுள் பிரதான நோக்கங்கள் சிலவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் | 2020/21 நிதியாண்டிற்கு உரிய செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொள்ள | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை |

செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவினதும் செயன்முன்னேற்றத்தை ஒட்டுமொத்தமாக நோக்கும் போது மொத்த மதிப்பிடப்பட்ட செலிவனமான ரூபா 154 மில்லியன் தொகையில் ரூபா 12 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பௌதீக ரீதியான செயன் முன்னேற்றத்தை கைப்பதற்றுவதற்கும் கம்பனி தவறியிருந்தது.

முடியாதிருந்தமைக்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணமாவது அப்போது நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை என்பதுடன் சுகாதார அறிவுறுத்தல்களின் பிரகாரம் போக்குவரத்து தடைகள் விதிக்கப்பட்டமை, தனிநபர்கள் கூடுதல் நிறுத்தப்பட்டமை, ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் எம்மால் திட்டமிடப்பட்ட கொழுந்து மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள், மதியுரை நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியாத நிலைமையொன்று உருவாகியது. மேலும், 2020/21 நிதியாண்டின் போது நிறுவனம் முகங்கொடுத்த நிதி இடறும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தாமைக்கு காரணமாக அமைந்திருந்தது. கொவிட் தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் தேசிய மற்றும் சர்வதேச சந்தையில் இடம்பெற்ற வீழ்ச்சி காரணமாக தேயிலை கைத்தொழில் போன்றே எமது நிறுவனமும் நிதி ரீதியான இடர்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்திருந்ததுடன் அதன் காரணமாக நாளாந்த செயற்பாட்டு பணிகள் நீங்கலாக ஏனைய பணிகளான உற்பத்தி மேம்படுத்தல், புதிய முயற்சிகள் மற்றும் ஆராய்ச்சி பணிகளை மட்டுப்படுத்துவதற்கு

நடைமுறைப் படுத்தல் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அல்லது தற்காலிகமாக நிறுத்துவதற்கு நேர்ந்தது. அதற்கு மேலதிகமாக தொழிற்சாலை அமைந்துள்ள பிரதேசத்தின் வளாகத்தினுள் (5Km) தனியார் கைத்தொழிற் சாலைகள் மூன்று அமைந்துள்ளதுடன் இந்த தொழிற்சாலைகளின் தேயிலைச் சபைகளின் அங்கீகரித்த விலையினை விட அதிக விலை செலுத்தி தரங் குறைந்த தேயிலை கொழுந்துகளை கொள்வனவு செய்யும் நடைமுறை பின்பற்றப்படுகின்றமையால் சிறுதோட்ட உரிமையாளர்கள் எமது கைத்தொழிற்சாலைக்கு கொழுந்து விநியோகித்தல் வீழ்ச்சியடைந்தமை ஒரு காரணமாக அமைந்துள்ளது. மேலும் அந்த கைத்தொழிற்சாலைகளின் தேயிலை கொழுந்துகளின் தரம் தொடர்பில் எதுவித ஆராய்ச்சியும் மேற்கொள்ளாது கொள்வனவு செய்யப்படுகின்ற காரணத்தால் கொழுந்து உரிமையாளர் கொழுந்தின் தரத்தை அதிகரித்தல் தொடர்பில் எதுவித முயற்சியையும் எடுக்கவில்லை.

2020/2021 நிதியாண்டினுள் நிலவிய கொவிட் தொற்றுநோய் பரவல் காரணமாக மனித வள இயலுமையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் நிறுவனத்தில் நிலவிய பாதகமான நிதி நிலைமை காரணமாக கொள்வனவுகளும்

| | | |
|---|---|---|
| | மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் கணக்காய்வின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு கருத்திற்கொள்ளக் கூடிய அளவிலான செயலாற்றலினை அண்மிக்க முடியாதுள்ளது. | |

**3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் களுபோவிற்றியான தேயிலை தொழிற்சாலை கம்பனியின் தலைமை அலுவலகத்தின் மனித வள இயலுமையை அதிகரித்துக் கொள்ளுதல் மற்றும் அலுவலக உபகரணங்கள் உள்ளடங்கலாக தேவைப்பாடுகளை வழங்கும் நோக்கில் ரூபா 3.32 மில்லியனும் விற்பனை நிலையத்தில் விற்பனை மாதமொன்றிற்கு 16,000 கிலோகிராம்கள் வரை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களை கண்டறிதல் உள்ளடங்கலான பணிகளுக்கான ரூபா 4.5 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பணம் எதுவும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | **விற்பனைப் பிரிவு**<br><br>இந்த தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் அரச துறை மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியுடன் சேவைகளை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுத்தமையால் அந்த கட்டளைகள் வரையறுக்கப்பட்டமை மற்றும் மாதாந்த கட்டளைகள் தொடர்ச்சியாக கிடைக்காமை ஆகியன இடம்பெற்றன. அவ்வாறே ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டமை மற்றும் போக்குவரத்து தடைகள் விதிக்கப்பட்டமை ஆகிய காரணங்களால் மக்கள் நடமாட்டம் இல்லாத நிலைமையில் விற்பனை பிரிவினுள் தேயிலை இருப்பாக கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்கள் முன்வராமையால் விற்பனை வீழ்ச்சியடைந்தது. தற்போது விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்காக களுபோவிற்றியான வலைத்தளம் நாளதுவரையாக்கப்படும் பணிகள் இடம்பெறுகின்றன. தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் இரண்டாவது தர மற்றும் முதன்மையற்ற தேயிலை அரச நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு தொழிற்சாலையின் தேறிய | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நடைமுறைப் படுதல் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விற்பனை விகிதத்தினை உயர்த்துவதற்காக எம்மால் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுத் தருமாறு பெருந்தோட்ட அமைச்சிற்கு கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அரச தலையீட்டுடன் எமது கம்பனியில் உற்பத்தியாகும் தேயிலை இருதரப்பு உடன்படிக்கை ஒன்றின் ஊடாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான கோரிக்கையொன்றும் பெருந்தோட்ட அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களுபோவிற்றியான தேயிலை தொழிற்சாலை கம்பனி தனியார் வழங்குனர் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 23,414,275 இற்கு 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நீராவி உற்பத்தி இயந்திரமொன்றிற்காக வழங்குனரின் நிபந்தனைக்கமைய விநியோகிக்கப்பட வேண்டிய 02 ரேடியேட்டர் இயந்திரங்களை விநியோகிக்காமையால் ரூபா 1,566,002 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறுள்ள போது நீராவி உற்பத்தி இயந்திரத்தினை பொருத்துவதம் குறைபாடுகளுடன் இடம்பெற்றமையால் இந்த தொகையினை செலுத்தாதிருக்க பணிப்பாளர் சபையினால் 2016 திசெம்பர் 21 ஆந் திகதி தீர்மானம் எடுத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக தீர்ப்பனவு செய்ய வேண்டும். |